# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

## International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:13 மே 2018

Vol. 4 Issue : 13 May 2018



IIJIF

INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR

DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301

office@iijif.com
https://iijif.com/

This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE

OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]

THIS CERTIFICATE IS PRESENTED TO

Inam: International E-Journal of Tamil Studies

e-ISSN: 2455-0531

The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.

Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321

MANAGER



ஆ.மணி
அ.மோகனா
இரா.இராஜா
கி.சங்கரநாராயணன்
ப.திருஞான சம்பந்தம்
மு.நாகராஜன்
விஸ்வேஸ்வரன்
மௌ.அஸ்கர் அலி
மா. உமாமகேஸ்வரி
சு.பேச்சியம்மாள்
கு.தனலெட்சுமி
அ.பிரீதா
மு.தமிழ்முல்லை

ரெ.அருணாதேவி
கு.சரஸ்வதி
இரா.வைதேகி
சி.யுவராஜ்
ந.மாலதி
இரா.பிரசன்னா
ப.மணிகண்டன்
ரா.ராஜராஜன்
நா.மலர்விழி
சே.செந்தமிழ்ப்பாவை
பெ.குபேந்திரன்
பெ.ராஜா
மா.ஆசியாதாரா
வி.மல்லிகா

இல.இராஜதுரை
க.தேவி
மீ.கோமதி
க.ரேவதி
வீ.மீனாட்சி
ம.பெட்ரிக் ஜெபராஜ்
ப.புவனேஸ்வரி
இரா.நித்யலெட்சுமி
சே.முனியசாமி
அ.அனேஜா
வி.வசந்தா
அ.புவியரசு
தி.நிரஞ்சனி
மா.யோகராஜ்
யே.டிலானி
மொ.சபீதாபானு
கா.தினேஷ்
ஆ.ஷைலா ஹெலின்
ம.சந்துரு
வசந்தமணி
பி.விஜி
த.சத்தியராஜ்
மா.பரமசிவன்

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2018 மலர் : 4 இதழ் : 13
May 2018 Volume IV Issue 13

# உள்ளே ...

## தொகுதி - ஒன்று

## தமிழ்ச் செவ்வியல்

**ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு : பத்துப்பாட்டுப் பதிப்பா?**
முனைவர் ஆ.மணி | 4

**பதினோராம் திருமுறை யாப்பு - பதிப்பு : சில குறிப்புகள்**
முனைவர் அ.மோகனா | 12

**யாப்பியலும் கணக்கியலும்**
முனைவர் இரா. இராஜா | 19

**வேற்றுமைகள் : மாற்றங்களும் வளர்ச்சிநிலையும்**
முனைவர் கி.சங்கர நாராயணன் | 26

**கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்**
முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 34

**முற்கால நீதிநூல்கள் சுட்டும் அரச முறைமையும் மக்களின் கடமைகளும்**
முனைவர் மு.நாகராஜன் | 40

**திருக்குறளில் 'ஆன்மா' என்ற கருத்துக் கூறப்படவில்லை**
விஸ்வேஸ்வரன் | 45

**தமிழர் சிந்தனை மரபில் அழகியலும் கலைகளும் : சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு**
திரவியராசா நிரஞ்சினி | 53

**சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்**
முனைவர் மௌ.அஸ்கர் அலி | 59

**பழந்தமிழரின் இயற்கைப் பாதுகாப்பு முறைமைகள்**
முனைவர் மா. உமா மகேஸ்வரி | 64

**இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை**
முனைவர் சு.பேச்சியம்மாள் | 69

**பத்துப்பாட்டில் உழவும் நெல் விளைச்சலும்**
கு. தனலட்சுமி | 75

**பழந்தமிழரின் போர் முறைகள்**
அ.பிரீதா | 79

**முல்லைத்திணை - அகப்பொருள் வெளிப்பாடு**
மு.தமிழ்முல்லை | 83

**பொருநராற்றுப்படையில் கரிகாற்சோழனின் சிறப்புகள்**
ரெ. அருணா தேவி | 87

**சங்க இலக்கியம் சுட்டும் பழந்தமிழர் தொழில்வளம்**
முனைவர் கு.சரஸ்வதி | 92

**எட்டுத்தொகையில் குளவி (காட்டு மல்லிகை)**
இரா. வைதேகி | 96

...

**UGC APPROVED JOURNAL NO: 64244**


IIJIF
INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR
DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301
office@iijif.com
https://iijif.com/
This certificate is valid for 1 year from the date of issue
CERTIFICATE
OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]
THIS CERTIFICATE IS PRESENTED TO
Inam: International E-Journal of Tamil Studies
e-ISSN: 2455-0531
The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.
Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321
MANAGER


**அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகள்**

சி. யுவராஜ் | 99

**அகநானூற்றின் கட்டமைப்பு**

ந. மாலதி | 104

**குறுந்தொகை முல்லைத்திணையில் மரங்களும் மலர்களும்**

இரா. பிரசன்னா | 107

**நற்றிணையில் தூதும் மடலும் உணர்த்தும் செய்திகள்**

ப.மணிகண்டன் | 111

**குறுந்தொகை உணர்த்தும் அறம்**

முனைவர் ரா. ராஜராஜன் | 115

**நாலடியாரில் 'முதியோர்' பதிவுகள் உணர்த்தும் சிந்தனைகள்**

முனைவர் நா. மலர்விழி | 119

**சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்**

முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை & பெ.குபேந்திரன் | 123

**சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்**

பெ.ராஜா | 126

**வரலாற்று நோக்கில் இடையியல் அமைவுநிலை**

முனைவர் மா.ஆசியாதாரா | 130


**தொகுதி - இரண்டு**

## காப்பிய இலக்கியம்


**ஒப்பியல் நோக்கில் நளன் கதையும் கதைவடிவங்களும்**

முனைவர் வி.மல்லிகா | 136

**நளன்கதை கூறும் இலக்கியங்கள்**

Rajadurai.L | 140


## பக்தி இலக்கியம்


**ஆழ்வார் பாசுரங்களில் அரையர் சேவை**

க. தேவி | 144

**அட்டப் பிரபந்தத்தில் அணிநயம்**

முனைவர் மீ. கோமதி | 148

**ஆழ்வார் பாசுரங்களில் அணிநலன்கள்**

க.ரேவதி | 152


## தற்கால இலக்கியம்


**'தவுட்டுக் குருவி' எழுப்பும் கலகக்குரல்**

முனைவர் வீ.மீனாட்சி | 155

**சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம் - வளர்ச்சி - முடிவு**

ம.பெட்ரிக் ஜெபராஜ் | 159

**ரமணிசந்திரன் புதினத்தில் பெண் நிலைப்பாடு**

ப. புவனேஸ்வரி | 163

**தினமணி இதழும் தலையங்கமும்**

முனைவர் இரா. நித்யலட்சுமி | 167


## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்


**முதுகுளத்தூர் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியமும் அந்நூலுக்குச் சாற்றுக்கவி பாடியோரும்**

சே.முனியசாமி | 171

**பூகோளத்தின் புதிய சவாலாகும் மின்னணுக் கழிவுகள்**

அரியரெத்தினம் - அனேஜா | 182

**சீனாவின் முத்துமாலைத் திட்டத்தினால் (One Belt One Road) இலங்கையில் ஏற்படும் விளைவுகள் - பொருளியல் நோக்கு**

வினாயகமூர்த்தி - வசந்தா | 192

**சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்கக்காலம்**

முனைவர் அ.புவியரசு | 203

**செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு**

திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 213

**விசேட தேவையுடைய பிள்ளைகளும், விசேட வழிகாட்டல் ஆலோசனையும்**

யேசுஜயா டிலானி & மொகமட் கனீபா சபீதா பானு | 219

**வள்ளலார் வகுத்த இனம்**

கா. தினேஷ் | 230

**சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்**

ஆ. ஷைலா ஹெலின் | 233

**வரைவிலக்கணங்கள்வழிக் கல்வி எனும் எண்ணக்கருவை ஆராய்தல்**

யேசுஜயா டிலானி | 238

**ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் ஏற்படுத்தும் தாக்கம்**

Shandru Mariyadas | 254

**பண்டைய சிற்பக் கலையும் அலங்கார வளைவு முறைகளும்**

முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 265

**கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்**

பி.விஜி | 269


## நூல் மதிப்பீடு


**சொல் நிலம்: வெளிப்பாட்டுத் திறனுரை**

த.சத்தியராஜ் | 277

**வாழ்வியலறம் + பாலியலறிவு = பண்டைத்தமிழர்**

முனைவர் மா.பரமசிவன் | 286


...

மதிப்பிடப்பெற்றது

# வள்ளலார் வகுத்த இனம்

கா. தினேஷ்
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் - 608 002.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர், எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என்ற உயரிய எண்ணத்தை உலகிற்கு உணர்த்தி அதன்படி வாழ்ந்து காட்டியவர் வள்ளலார். வடலூரில் சன்மார்க்க சங்கத்தைத் தோற்றுவித்து, சாதி, மதம், மொழி, இனம் இவற்றையெல்லாம் தவிர்க்க வழிவகை செய்தவர். எவ்வுயிரையும் தம்முயிர் போல எண்ணிய வள்ளலார் தாம் இயற்றிய அருட்பாவிலும் அன்பர்களுக்குச் சொன்ன உபதேசங்களிலும் இனப் பேதமையைச் சுட்டுகிறார். அவ்வகையான இனம் எத்தன்மையது என்பதை ஆய்வதே இக்கட்டுரை.

**இனம் - பொருள் விளக்கம்**

இனம் என்பது அடையாளப்படுத்துதல், அப்பொருளின் தன்மை என்று கலைக் களஞ்சியம் பொருள் கூறுகிறது. தன்மை என்பதை வடமொழியாளர்கள் 'லட்ஷணம்' என்று கூறுகின்றனர். இது தமிழ்மொழியில் இலக்கணம் எனப்படுகிறது. தமிழ்மொழி அகராதி இனம் என்பதற்கு, குலம், வகுப்பு, சுற்றம், சேர்ந்த கூட்டம் என்பதாகப் பொருள் கூறுகிறது. இனம் என்பது பொதுவாக சேர்ந்த கூட்டம் என்று இலக்கியங்கள் பல எடுத்தியம்புகின்றன. தொல்காப்பியர் இனம் என்பதனை,

*நேர்இன மணியை நிரல்பட வைத்தாங்கு*
*ஒர்இனப் பொருளை ஒருவழி வைப்பது* (தொல்.பொருள் - 1417)

என்று கூறுகிறார். ஒரே தன்மை கொண்ட பொருளை ஓர் இனமாக வைப்பது என்பது ஒரே வகையான மணிகளைக் கோவைப்பட வைப்பது போன்று என்று உரையாசிரியர் விளக்கம் தருகிறார். ஆகவே, இனம் என்பது ஒரே தன்மை பொருந்தியவர்கள் ஒன்று சேரும் கூட்டம் என்பது புலனாகிறது. இவ்வினம் என்பது எல்லா உயிர்க்கும், உயிரல்லாதற்கும் பொருந்தும். குறிப்பாக உயிர்களுக்கு அதிலும் மானுடர்களுக்கு இவ்வினம் அகஒழுக்கத்தையும், புறஒழுக்கத்தையும் பொறுத்தே இனம் பகுக்கப்பட்டிருக்கிறது. உயிர்களிலே ஊர்வன, பறப்பன, நடப்பன என்ற அடிப்படையில் இனம் வகைப்படுத்தப்பட்டாலும் மனிதனுக்கு அவனின் அறிவினைப் பொறுத்தே இனம் சுட்டப்படுகிறது. இதனை வள்ளுவர்,

*நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு*
*இனத்தியல்பது ஆகும் அறிவு* (குறள்.452)

என்று கூறுவதன் வாயிலாக இனத்தியல்பால் அத்தன்மையான அறிவைப் பெறக்கூடும் என்று கூறுகிறார். சிற்றினம் சேராமை என்னும் அதிகாரத்தின் வாயிலாக அறிவைப் பொறுத்தே அவன் இனப்படுகிறான் என்றும் கூறுகிறார்.

**வள்ளலார் குறிப்பிடும் இனம்**

ஓரறிவு முதல் ஆறறிவு வரை எவ்வுயிரிடத்தும் அன்புபூண்டு ஒழுகிய வள்ளலார், தாம் இயற்றிய அருட்பாவில் இனப்பேதமையைச் சுட்டுகிறார். அவர் ஆறாம் திருமுறையில்,

*உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்*
*உறவினத்தார் அல்லர் அவர் புறஇனத்தார் அவர்க்குப்*
*பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக*
*பரிந்துமற்றை பண்புரையேல் நண்புதவேல் இங்கே*
*நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்*

*நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே*
*மயர்ப்பறு மெய்த்தவர் போற்றப் பொதுவில் நடம்புரியும்*
*மாநடத்தென் அரசேஎன் மாலை அணித் தருளே* (திருவருட்பா-4160)

என்று கூறுகிறார். சன்மார்க்க சங்கம் வைத்து, சமரசம் கண்ட வள்ளலார் மானுடர்களை உறவினத்தார், புற இனத்தார் என்று சுட்டுகிறார். தம் அன்பர்களுக்கு உபதேசம் செய்யுங்கால் ஒவ்வொரு முறையும் அகவினத்தார், புறவினத்தார் என்றே சுட்டிக் கூறுவார்.

**அக இனமும் புறஇனமும்**

வள்ளலார் சுட்டும் இவ்விரு இனமும் மனிதர்களின் செய்கையைப் பொறுத்தே அமைகிறது. அதிலும் அடிப்படைத் தேவைகளின் முதலாவதாக் கொள்ளும் உணவு முறையில் சன்மார்க்கத்தின் அடிப்படைத் தகுதியாகிக் கொண்டார். உயிர்க்கொலை செய்பவனும், அவ்வுயிரைக் கொன்று அதனைப் புசிப்பவனும் நம்மவர் இல்லை என்றும், அவன் புறஇனம் என்றும் சுட்டுகிறார். எவன் ஒருவன் உயிர்க்கொலை செய்வதைத் தவிர்த்தும் அதனை உண்பதை மறுக்கிறானோ அவனே அகவினம் அதாவது உறவினம் என்று கூறுகிறார். புறவினத்தாரின் இச்செய்கைகூட அவனது அறியாமையே என்று கூறுகிறார். ஆகையால் அவ்வினத்தினரை வெறுத்துவிடாமல் அவர்களுக்கும் பசிதவிர்த்தல் மட்டுமே செய்க என்று தம்பாடலில் குறிக்கிறார். மற்றபடி அவர்களுக்கு ‘பண்புரையேல் நண்புதவேல்’ என்று கூறுவதன்மூலம் அவர்களுக்குப் பண்பான சொற்களோ நட்புப் பாராட்டி அவர் செய்கைக்கு உதவவோ வேண்டாம் என்று கூறுகிறார். அவர்கள் சன்மார்க்க நெறியை மேற்கொள்ளும்வரை இதுவே அவர்களுக்குச் செய்ய வேண்டியது. இத்தகைய செயலைச் செய்பவரை வள்ளலார் குறிப்பிட்டபடி பல சான்றோர்களும் உயிர்க்கொலையையும் புலைப் பொசிப்பையும் கண்டிக்கின்றனர்.

*கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையார்*
*புன்மை தெரிவார் அகத்து* (குறள்-329)

என்று கூறுவதன்மூலம் கொலையையே செய்தொழிலாக உடைய மக்களை மாக்கள் (விலங்கு) என்று கூறுகிறார் வள்ளுவர். கொலைத்தொழிலின் இழிவை உணர்ந்தவரிடத்தில் தாழ்ந்த செயலினராகவே தோன்றுவர். இதில் மனித இனமாக இருந்தாலும் கொலைத் தொழிலால் விலங்கினமாகக் குறிப்பிடுகிறார். மேலும், ஏலாதி என்னும் நூலில் கணிமேதாவியார்

*...கொல்லான் உடன்பாடன் கொல்வர்*
*இனஞ்சேரான் புல்லான்* (ஏலாதி-42)

என்று கூறுகிறார். கொலைத்தொழிலைச் செய்யும் இனத்தைச் சேர்ந்தவன் புல்லறிவை உடையவன் என்கிறார். புல்லறிவு என்பது அற்ப அறிவாகும், அல்லது அறியாமையைக் குறிப்பதாகும். இதுபோன்று இலக்கியங்கள் பல கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் எடுத்துக் கூறி அவற்றை மேற்கொள்பவனையும் தவிர்ப்பவனையும் இனத்தால் வேறுபடுத்துகின்றன.

**முடிவுரை**

ஆன்மநேய ஒருமைப்பாட்டை வளரச்செய்யும் நோக்கத்திலேயே வள்ளலார் மானுடர்களை அகவினத்தார், புறவினத்தார் என்று வேறுபடுத்தினாரே தவிர பிறிதொன்றில்லை. பிறப்பால் எல்லா உயிர்களும் சமம் என்பதனை மேம்படுத்த புலையும், கொலையும் தவிர்ப்பது அவசியமாகும். உயிர்களின் அறிவு வளர்ச்சியைப் பொறுத்தே இன வேறுபாடு அடைகின்றது. அவற்றைக் களைந்து, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செய்வதால் புறவினத்தார் எல்லாம் அகவினத்தாராகி ஓர் இனமாக இன்புற்று வாழலாம் என எண்ணியவர் வள்ளலார்.

**துணைநின்றவை**


- கௌமாரீஸ்வரி எஸ்.(பதி.), 2009, தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை, சென்னை சாரதா பதிப்பகம், சென்னை.

- துரைசாமிப்பிள்ளை ஔவை சு.,(உரை.), 1989, திருவருட்பா - மூலமும் உரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலை நகர்.
- புலியூர்க் கேசிகன்(உரை.), 1998, திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், சென்னை.
- ……………., 1959, கலைக் களஞ்சியம், தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை.
- ……………., 2001, பதினெண் கீழ்க்கணக்கு மூலமும் உரையும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- www.tamilmozhiagarathi.com